**லுணுகல பிரதேச சபை - 2023**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லுணுகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் லுணுகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 192,856 அதிகரித்து காண்பிக்கப்பட்ட தவறு சரி செய்யும் போது அப்பெறுமதி இயந்திர உபகரண கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய செலவு பதிவுகள் கணக்கீடு செய்யப்படிருக்கவில்லை. | திரண்ட நிதியத்தில் கணக்குகள் கணக்கில் இடம்பெற்ற தவறு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 250,881 தொகையான கேள்வி வாடகை வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டில் ஏனைய செலவினமாக ரூபா 1,502,868 கண்கீடு செய்யப்படாத தவறு மீளாய்வாண்டில் சரிசெய்யும் போது திரண்ட நிதியத்தில் மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கு டிசம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் எக்கிரிய கிராம நீர் செயற்திட்டத்தில் நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 60,438 ஆக இருந்த போதிலும் நிதிநிலைமைக் கூற்றில் ரூபா 153,944 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய வேலை பூர்த்தி செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படாத 08 வேலைகள் ரூபா 4,658,596 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு கொள்வனவு செய்வதற்கான நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 48,500 ஆக இருந்த போதிலும் அது 448,500 ஆக ரூபா 400,000 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (எ) | உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்குரிய பட்டியல்களில் மீளளிப்பு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 112,912 மேலும் பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளளிப்புச் செய்யப்பட்ட பணம் கடன் பட்டோர் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளளிப்பு செய்யப்படுகின்ற பணம் கடன்பட்டோர் பதிவேட்டிலிருந்து அகற்றி பதிவேடுகள் நாளது வரையாக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,030,248 காகிதாதிகள், நீர் உபகரணங்கள் மற்றும் எரிபொருளை உள்ளடக்கிய நுகர்வுப் பொருட்களுக்காக நாளதுவரையாக்கப்பட்ட இருப்புப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | சமப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | பட்டோலைகளை நாளது வரையாக்கி நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,531,373 ஆன பொது வைப்பு மீதிக்காக விரிவான பட்டோலை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாளது வரையாக்குவதற்கு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | சபைக்குரிய 03 வாகனங்களுக்குரியதாக 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு முழுமையான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முழுமையான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை குறித்துரைத்த காலத்தில் சமர்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,513,500 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 13,972,065 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 1,082,800 | 1,180,110 | 894,431 | 285,679 | 1,082,800 | 1,180,110 | 717,725 | 462,385 |
| (ii) | வாடகை | 4,855,499 | 3,847,290 | 3,418,935 | 428,355 | 7,409,700 | 3,207,707 | 2,018,886 | 1,188,821 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,541,000 | - | 794,016 | - | 1,186,000 | - | 840,634 | (840,634) |
| (iv) | ஏனைய வருமானம் | 3,000,000 | 4,207,220 | 3,881939 | 325,281 | 5,500,000 | 4,384,685 | 1,124,595 | 3,260,090 |
| | மொத்தம் | 10,479,299 | 9,234,620 | 8,989,321 | 1,039,315 | 15,178,500 | 8,772,502 | 4,701,840 | 4,070,662 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,784,071 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,029,154 பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கழிவுப் பொருட்கள் நாளாந்தம் பிரிக்கப்பட்ட பின்னர் உக்காத கழிவுப் பொருட்கள் கணிசமான அளவு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் வளவில் திறந்தவாறு போடப்பட்டிருந்தது. | உக்காத கழிவுப் பொருட்கள் தளத்தின் நிலையமொன்றில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. | கழிவுகள் முறையாக அகற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கழிவுகளை அகற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது வனப்பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து வாடகை அடிப்படையில் காணியொன்று பெற்று ரூபா 6,383,675 செலவில் இரண்டு கழிவுப் கழிவுப்பொருள் தளங்கள், கூட்டுப்பசளை, களஞ்சிய அறை, கழிவுகளை கூறுகளாக்கும் இயந்திரம் என்பன கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது. கழிவுப்பொருள் தளத்திற்கு மூன்று சுற்று மின்னிணைப்பு பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கழிவுப்பொருள் தளத்திற்கு செல்லும் வீதி அதிகளவில் உடைந்த நிலமையில் காணப்பட்டதன் காரணமாக மின்பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் வீதியை நல்ல நிலமைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற 05 நீர் செயற்திட்டங்களின் மூலம் 1143 நீர் பாவனையாளர்கள் குடிநீர் சேவையை பூர்த்தி செய்கின்றனர். மீளாய்வாண்டின் போது ஒரு நீர் செயற்திட்டத்தில் ஒரு சந்தர்ப்பத்தின் போது நீர்மாதிரி தரப்பரிசோதனை செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய நீர் செயற்திட்டங்களில் நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | மக்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தி நீர் தேவையை பூர்த்தி செய்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூரியகொட கழிவுப்பொருள் தளத்தில் மின்சார தேவை மற்றும் பல்நோக்கு கட்டிடத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கும் போது பயன்பாட்டிற்கு எடுக்கும் நோக்கில் ரூபா 4,312,500 செலவில் 20 KVA மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பிரதேச சபைக்கு 08 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கழிவுப்பொருள் தளத்திற்கு கஷ்டமான வீதிகளில் பயணம் செய்து அவ்வப்போது மின்பிறப்பாக்கி இயந்திரம் கொண்டு செல்வதற்கும் ஏற்படுகின்ற செலவினம் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் வருமானம் உழைத்துக் கொள்ளும் இயலுமை தொடர்பாக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் | பிரதேசத்தின் தேவையின் அடிப்படையில் மின்பிறப்பாக்கி இயந்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களின் தேவை, கிரயம் மற்றும் பராமரிப்புக்களை கவனத்திற் கொண்டு சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின்போது பல்நோக்குக் கட்டடத்தில் பின்பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட சமயலறை முதலாவது மாடியின் 03 மண்டப அறைகளாக கூறுகளாக்கி வாடகைக்கு வழங்குவதற்கு ரூபா 650,904 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | LDSP செயற்திட்டத்திலிருந்து எந்தவொரு நிர்மாணத்திற்காகவும் அனுமதி வழங்காமையின் காரணமாக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நிதி பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | பல்நோக்கு கட்டிடத்தின் பிரதான பெயர் பலகை தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் பெயர்ப் பலகையின் இரும்பில் எழுத்துக்கள் சுவரில் கல்பதித்து ஒட்டுவதற்காக கூறுவிலை பெறப்பட்டிருந்த போதிலும் மாதிரிகளுக்கு இனங்காதவகையில் சுவரில் குறுக்காக சதுர பார் 06 வரிகள் இட்டு எழுத்து ஒட்டப்பட்டிருந்தது. இதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையான ரூபா 350,000 செலுத்தப்பட்டிருந்தது. | கல் பொருத்தும் போது அதிக வெப்பத்திற்கு உட்பட்டு கல் இலகுவாகின்றமையால் வெடிக்காமல் அலுமினிய பட்டிகளின் உதவியுடன் எழுத்து பொருத்தப்பட்டுள்ளது. | மாதிரிகளின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) நிதியத்திலிருந்து ரூபா 445,500 செலவில் 100 மழை மேவுகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. களஞ்சியத்தில் காணப்பட்ட 47 மழை மேவுகைகளின் லேபல்களில் குறிப்பிடப்பட்ட ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 3,990 ஆக இருந்தபோதிலும் ரூபா 4,455 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 46,500 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மழை மேவுகை கொள்கலன்களை கொள்வனவு செய்யும் போது தவறொன்றினால் வேறு உறைகளில் வைக்கப்ட்டிருந்தது. | கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | காணியின் உரித்தை தீர்த்து வைக்காமல் 2020 ஆம் ஆண்டின போது பிரதேச அபிவிருத்து உதவி செயற்திட்டத்ததின் (LDSP) நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 4,459,042 செலவில் ஜனதாபுர பல்நோக்குக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 100,294 செலவில் மின்சார | 02 கடைகள் கேள்வி கோரப்பட்டுள்ளதுடன் ஏனைய கடைகள் கேள்வி கோருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையும் காணியின் உரித்தை தீர்த்து வைப்பதற்கு லுணுகல பிரதேச செயலகத்திற்கு அனுப்பபட்டுள்ளது. | நிதியேற்பாடுகளை வினைத்திறனான பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணைப்பும் பெறப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி வரையிலும் பல்நோக்குக் கட்டிடத்திலிருந்து வருமானம் உழைக்கப்படடிருக்கவில்லை. | | |
| (ஊ) | நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் அமைச்சின் நிதி பங்களிப்பு நீர் மாதிரிகளை பரீட்சித்து பரிசோதனைக் கூடமொன்று நிர்மாணித்து பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அமைய அடிப்படையில் நாளொன்றுக்கு ரூபா 2,500 படியொன்று செலுத்தி ஆய்வுகூட தொழினுட்பவியளாலர் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தும் அடிப்படையில் ஆய்வுகூட உதவியாளர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் இந்த இருவரி நாளும் நகரத்தின் நீர்வழங்கல்நிலையத்தில் நீர்வரிகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தது. | தற்போது 05 நீர் உத்தேச திட்டங்களில் நீர்மாதிரிகள் பரீட்சிக்கப்படுகின்றது. | நீர்மாதிரிகளின் பரிசோதனைக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 03 டெக்டர் வண்டிகள் மற்றும் 02 டெக்டர் டேலர்களின் உரித்து சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கல்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய வாகனங்களின் உரித்து கையேற்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அரசு சார்பற்ற அமைப்பினால் கிடைக்கப்பெற்ற DELL வகையின் 03 DESKTOP கணினிகளில் ஒரு கணனி காணாமல் போயிருந்தது. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய சொத்துக்களை மீண்டும் சபைக்கு கையேற்றல் வேண்டும். |